
# 1:3 நீதியின் நிறைவே நல்வாழ்வு



சிறிய நாடு அல்லது பெரிய நாடுகளில் வாழும் மனிதருக்கு பொதுவான ஓர்எதிர்பார்ப்பு இருக்கும். அது, நாட்டின் குடிமக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து வாழ வேண்டும் என்பதாகும். மக்களின் நல்வாழ்வு மற்றும் எதிர்காலம் நேர்மையான அல்லது நேர்மையற்ற தலைவர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது. ஆட்சியாளர் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நேர்மையாக நிறைவேற்றும் கடப்பாடு கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். மக்கள் ஆட்சியாளருக்கு தங்களது ஒத்துழைப்பை வழங்கக் கடமைப்பட்டுள்ளனர். தொடக்கத்தில் இருந்தே ஆட்சியாளரின் ஆளும் முறைமைகள் தொடர்பாக கடவுள் கண்காணித்து வந்துள்ளார். இது தொடர்பாக நாம் திருவிவிலியத்தில் பல்வேறு எடுத்துக் காட்டுகளைக் காணலாம்.

## நீதியான ஆட்சி அமைப்பு



ஆபிராம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.

(தொடக்க நூல் 15:6)

மேற்காணும் திருவிவிலியப் பகுதியில் ஆதிப்பிதாவாகிய ஆபிரகாம் மற்றும் கடவுள் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை குறித்துக் கூறப்படுகின்றது. பழைய ஏற்பாட்டில் கடவுளுக்கும், மானிடருக்கும் இடையேயான உடன்படிக்கை குறித்து நீங்கள் கற்று இருப்பீர்கள்.

உடன்படிக்கை என்பதன் அடிப்படை, அதற்கு உட்பட்ட இரு பகுதியினரும் தாம் செய்துக் கொண்ட உடன்படிக்கைக்கு உண்மையாய் இருத்தலே ஆகும். இதையே “நீதியான வாழ்வு” என பழைய ஏற்பாட்டுத் திருமறை கூறுகிறது. ஆபிரகாம் தன் வாழ் நாள் முழுவதும் கடவுளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு உண்மையாக வாழ்வதில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்தார். எகிப்தில் அடிமைத்தனத்தில் இருந்த இஸ்ரயேலர் விடுதலை



இலவச விநியோகத்திற்காக

பெற்று பாலை நிலத்தில் பயணிக்கும் பொழுது கடவுள் தம்மோடு உலவுவதை அறிந்தனர். இப்பயணத்தின்போது இஸ்ரயேலர் கடவுளுடன் உடன்பாடு செய்தனர். இவ்வுடன்பாட்டின் அடையாளமாக நீதிச்சட்டத்தைப் பெற்றுக்கொண்டனர். வாக்களிக்கப்பட்ட நாட்டில் பன்னிரண்டு கோத்திரங்களாகக் குடியேறிய இவர்களை, அவர்கள் நடுவிலிருந்தே தோன்றிய நீதித் தலைவர்கள் வழி நடத்தினர்.

சமயக் குருவாக அருட்பொழிவு பெற்ற சாமுவேல், நீதித்தலைவராகவும் இறைவாக்கினராகவும் திகழ்ந்தார். தங்கள் அயல்நாடுகளில் அரசாட்சி நடைமுறையைக் கண்ட இஸ்ரயேலர் தங்களுக்கும் ஓர் அரசனை ஏற்படுத்துமாறு சாமுவேலிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

## முடியாட்சியில் மன்னன் சவுல்



வாசியுங்கள்

1 சாமுவேல் 8:-18.

இவ்வேண்டுகோளைக் குறித்து சாமுவேல் கவலையடைந்தார். எனினும் கடவுள் ஓர் அரசரைத் தேர்ந்து எடுப்பதற்கு இசைந்தார். ஆயினும் கடவுள் சாமுவேலிடம், "அவர்கள் உன்னைத் தள்ளவில்லை; என்னையே தள்ளி விட்டார்கள்" எனக் கூறினார்.

இஸ்ரயேல் நாட்டின் முதலாவது அரசராக பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த கீசு என்பவரின் புதல்வரான சவுல் தேர்ந்தெடுக்கப்பட்டார். சாமுவேல், சவுல் அரசனிடம் "நீ கடவுளுக்கு அஞ்சி மக்களை வழி நடத்த வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்.



ஆட்சியாளரின் முதன்மையான கடமை என்பது குடிமக்களைக் காத்தலாகும். குடிமக்களின் பொறுப்பு நாட்டின் தலைவரைப் பாதுகாத்தலாகும். இது இருபாலரும் உடன்படுகிற ஓர் ஒப்பந்தமாகும்.



இலவச விநியோகத்திற்காக

## கோலியாத்தும் கூழாங்கல்லும்



சவுலின் ஆட்சியில் தாவீது ஓர் அடிமட்ட குடிமகன் ஆவார். இஸ்ரயேல் நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலான பெலிஸ்தியரை மேற்கொள்வதில் சவுல் அரசன் மிகவும் கடினப்பட்டார். பெலிஸ்திய போர் வீரனான கோலியாத் மிகப்பெரும் அறை கூவலாக இருந்தான். தாவீது ஒரு ஆடுமேய்க்கும் சிறுவன். இவர் கோலியாத்தை எதிர்க்கப் புறப்பட்டு வந்தார். இக்காட்சியை உங்கள் மனக்கண் முன் கொண்டு வந்து பாருங்கள்.

பெலிஸ்திய நாடு கோலியாத் போன்று ஓர் வலிமையான நாடு என்றும், இஸ்ரயேல் நாடு சிறுவன் தாவீது போன்று வலுவற்ற நாடு என்றும் இதன் மூலம் எடுத்துக் கூறப்படுகின்றது. இவ்வலுவான போர் வீரன் கோலியாத்தை, சிறுவன் தாவீது வெறும் கூழாங்கற்களைக் கொண்டே வீழ்த்தி வெற்றி கண்டார். இதை கடவுளின் வழிநடத்தல் என்றே இஸ்ரயேல் மக்கள் நம்பினர்.

## பகைமை வென்ற நட்பு

கோலியாத்தை வெற்றி கண்டதன் மூலம் இஸ்ரயேலில் தாவீது புகழ் பெற்றவர் ஆனார். தாவீதின் புகழ் **சவுல்** அரசனை முகம் சுளிக்கச் செய்தது. இருவருக்கும் நட்பு ஏற்பட்டாலும் அடி மட்டத்தில் பகைமை உணர்வு புகைந்து கொண்டே இருந்தது. சவுல் அரசன் பல முறை தாவீதைக் கொல்ல எத்தனித்தார்.

எனவே, தாவீது தப்பியோடி காட்டில் அலைந்து திரிந்தார். தாவீதை விட்டு வைப்பது அரசாட்சிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என எண்ணிய சவுல் அவரைப் பிடிக்கும்படி காடுகளில் புகுந்து தேடினார்.

ஒரு நாள் தாவீதைத் தேடிச் சென்ற சவுல் தனது காலைக் கடன்களுக்காக ஓர் குகையினுள் நுழைந்தார். போர் வீரர்கள் காவலுக்காக வெளியே நின்றனர். தாவீது சவுலை நிழல் போல் தொடர்ந்து குகையினுள் நுழைந்தார். தன்னுடைய கூர்மையான வாளை எடுத்து அரசனின் மேலங்கியின் தொங்கலை அறுத்து எடுத்தார். அதைக் கண்டு அரசன் திடுக்கிட்டு எழுந்தார். தாவீது சவுலை நோக்கி, ‘‘அரசே கடவுள் இன்று உம்மை என் கரத்தில் ஒப்படைத்தார் அல்லவா? ஆயினும் அரசனாய் திருநிலைப்படுத்தபட்ட உம்மீது கொலை வாளை வைக்க மாட்டேன்'' எனக் கூறினார். ‘‘பிறர் சொல்வதைக் கேட்டு நீர் என்னை ஏன் துரத்தி வருகிறீர்?'' எனக் கேட்டார். அதன் பிறகு அங்கிருந்து

அகன்றுச் செல்ல முயன்றார். தாவீது திரும்பிச் செல்வதைக் கண்ட சவுல் அரசர் அவரை அழைத்து, "மகனே தாவீது, நீ என்னிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; ஆனால் நானோ உனக்குத் தீங்கு செய்தேன்"என்றார். (1 சாமுவேல் 24:17 - 18)

இதில் புலப்படும் உண்மை என்னவெனில், நீதி என்பது சமூக வாழ்வில் மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாடுகளை மதித்து உண்மையாய் வாழ்தலாகும். சவுல் அரசனின் கடமை குடிமக்களைக் காப்பதாகும். ஆயினும் தாவீதைக் காப்பதில் அவர் தவறு இழைத்தார்; அரச நீதியை இழந்தார். தாவீது ஒரு குடிமகன் என்ற வகையில் அரசனைக் கொல்லாது விட்டு நீதியை ஏற்படுத்தினார்.

எனவே நீதியான வாழ்வு என்பது இருபகுதியினரும் தாங்கள் உடன்பட்ட விதிகளுக்கு அமைய இசைந்து வாழ்வதே ஆகும்.

## நல்லாட்சியில் நன்மை விளையும்

சவுல் போரில் பெலிஸ்தியரால் கொல்லப்பட்ட பின்பு, **தாவீது** இஸ்ரயேலின் அரசன் ஆனார். தான் குடிமகனாக இருந்தபோது தனது நெருங்கிய நண்பராக இருந்த சவுல் அரசனின் மகனாகிய யோனத்தானை நினைவு கூர்ந்தார். யோனத்தானின் மரணம் அவரைக் கவலைக்குள்ளாக்கியது.

சவுலின் குடும்பத்தில் யாரேனும் மீந்திருக்கிறாரா எனத் தேடினார். யோனத்தானின் மகனாகிய மெபிபொசேத்து எனும் முடமானவர் மட்டும் எஞ்சியிருக்கிறார் என அறிவிக்கப்பட்டது. சவுல் தன்னை மிக அதிகமாக பகைத்தும், அவருடைய பின் சந்ததியாருக்கு தாவீது இரக்கம் காட்டி, தன் வாழ் நாள் முழுவதும் மெபிபொசேத்தை ஆதரித்து வந்தார். நீதியான வாழ்வுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருந்தது. (2 சாமுவேல் 9:1-13)

பிற் காலத்தில் (கி.மு 626) இஸ்ரயேல் நாட்டின் அரசனாகிய **யோசியா** மிகச்சிறப்பாக ஆட்சி நடத்தினார். இஸ்ரயேல் நாட்டையும் அதன் மக்களையும் நீதிச் சட்டத்திற்கு அமைவாகச் சீர்த்திருத்தினார். இச்சீர்த்திருத்தப் பணியை தனது வயதை ஒத்த ஏரேமியாவுக்கு கையளித்தார். ஏரேமியா யூதேயாவின் அனைத்து நகரங்களுக்கும் வீதிகளுக்கும் சென்று நீதிச்சட்டம் சார்ந்த சீர்த்திருத்தங்களைப் பரப்பி வந்தார்.

## நல்லாயன் சொல்லும் செயலும்



உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்து கொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள். கடைசிக் காசு வரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 5:25 - 26

இயேசு அவர்களைப் பார்த்து ‘விடுங்கள் போதும்’ என்று கூறி அவருடைய காதைத் தொட்டு நலமாக்கினார். லூக்கா 22 : 50 - 51

அப்போது இயேசு, “தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்ன வென்று இவர்களுக்குத் தெரியவில்லை” என்று சொன்னார். (லூக்கா 23:34)

### செயல்பாடு

1. ஆபிரகாம், தாவீது, சவுல், யோசியா ஆகியோர் தொடர்பான பாடங்கள் மூலம் நீதியான வாழ்வு குறித்து நீங்கள் கற்றுக்கொண்ட முன்மாதிரிகள் யாவை?

2. நீதியான ஆட்சியாளருக்குரிய குணநலன்களை விவரித்து ஒரு அட்டவணை தயாரிக்கவும்.